**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

## முன்மொழியப்பட்ட 2024 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டை (வரவுசெலவுத் திட்டத்தை) பிராம்ப்டன் நகர மேயர் பேட்ரிக் பிரவுன் அவர்கள் வெளியிட்டார்

*2024 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் ஆனது,பேருந்துப்போக்குவரத்து மற்றும் உடல் ஆரோக்கியத்தின் மீதான அக்கறை மீது கவனம் செலுத்தி பிராம்ப்டனுக்கான அனுகூலத்தை உருவாக்குகிறது*

பிராம்ப்டன், ON (நவம்பர் 29, 2023) –இன்றைய தினம், ***வலுவான மேயர்கள், ம்ற்றும் வீடுகள் கட்டும் சட்டம்*** (*Strong Mayors, Building Homes Act) 2022,* எனும் புதிய மாகாண சட்டத்தின் கீழ் தனது முதல் பட்ஜெட்டை பிராம்ப்டன் நகரத்தின் மேயராகிய, பேட்ரிக் பிரவுன் அவர்கள், தாக்கல் செய்தார். பிராம்ப்டன் நகரத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய படியாக குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகர்களின் பின்னூட்டக் கருத்துகளைப் பெறுவதற்காக 2024 பட்ஜெட்டின் அதிகாரபூர்வ வரைவானது இப்போது கிடைக்கிறது.

பிராம்ப்டனுக்கான அனுகூலத்தைக் கட்டமைப்பதில் கவனம் செலுத்தும் இந்த பட்ஜெட் ஆனது, பொதுப் போக்குவரத்து, உடல் ஆரோக்கியம் மீதான அக்கறை, பொழுதுபோக்கு, சுற்றுச்சூழல், சாலைகள் மற்றும் உள்கட்டமைப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு முக்கிய முதலீடுகள் செய்வதுடன் பொருளாதார வளர்ச்சியை சமநிலைப்படுத்துகிறது; இந்த முதலீடுகள், மேயர் மற்றும் நகரசபையின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கின்றன.

ஒவ்வொரு ஆண்டும், வருடாந்திர வரவுசெலவுத்திட்டமானது முன்னுரிமைகள், இலக்குகள் மற்றும் முன்முயற்சிகளை அடையாளப்படுத்துகிறது; இவை குடியிருப்பாளர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த முன்னுரிமைகளில் நகர நிர்வாகம் முதலீடு செய்வதை உறுதி செய்கின்றன. விரிவான சமூக ஈடுபாடு மற்றும் 5000 க்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்களுடன் கூடிய பட்ஜெட் – க்கு முந்தைய டெலிபோன் டவுன்ஹால், நகரம் முழுவதும் உள்ள வார்டு கவுன்சிலர்களுடன் காபி குடித்தபடியான அரட்டைகள் மற்றும் வணிகர்கள் பங்கேற்ற வட்ட மேசை ஆகியவை நடத்தப்பட்டன; இவையனைத்தும் இணைந்து, இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமானது, நகரத்தின் மூலோபாயத் திட்டத்துடன் சாதனை படைக்கும் அளவிலான முதலீடுகளை உருவாக்குகின்றன.

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

பொதுமக்களின் பிரதிநிதித்துவம் மற்றும் கவுன்சில் விவாதங்கள் ஆகியவை டிசம்பர் 5 செவ்வாய்க்கிழமையன்று தொடங்கவுள்ளன.

**2024 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்-இன் சிறப்பம்சங்கள்**

*கட்டுப்படியாகும்தன்மை & சேவை மிளிர்ச்சி*

- வரி பட்டியல் வகையில் நகரப் பகுதிகளில், நகர நிர்வாகத்தின் முன்மொழியப்பட்ட வரியானது 1.9%, அதிகரிப்பாக இருக்கும்; இது செப்டம்பர் 2023 க்கான பணவீக்க விகிதமாகிய (3.8%) க்கும் குறைவுதான். இந்த அதிகரிப்பானது, பீல் பிராந்திய வரி விதிப்பைக் (4.5%) காட்டிலும் பாதியளவுக்கும் குறைவேயாகும் மற்றும் மிஸ்ஸிஸ்ஸாகா-வின் வரிவிதிப்பை (2.3%) விடக் குறைவேயாகும்;
- $139M – இதுதான் இதுவரை இருந்ததில் மிகப்பெரிய அளவிலான கையிருப்பு நிதியாகும்; இதில் நகரப் பேருந்துகள், சாலைகள், பொழுதுபோக்கு மையங்கள், பொது இடங்கள் மற்றும் இதர உள் கட்டமைப்பு சொத்து வகைகளுக்கான வரி விதிப்பில் தாக்குப்பிடிக்கும் வகையில் உள்ளது. இதன் பெரும்பான்மைப் பகுதி நமது உள்கட்டமைப்பினை நிலைநிறுத்துவது மற்றும் மேம்படுத்துவதற்கேயாகும்.
- $913M செலவளிக்கத்தக்க பட்ஜெட்-க்கு, $544M முதலீட்டு வகை பட்ஜெட்-க்கு = ஆக மொத்தம் $1.5B பில்லியன்

*உடல் ஆரோக்கியப் பராமரிப்பு*

- நகர நிர்வாகமானது, நகரத்தின் உள்ளூர் பங்கான $125M க்காக, ஏற்கனவே $74M (செப். 2023) கையிருப்பு நிதியை உருவாக்கி வைத்துள்ளது.
- பிராம்ப்டனுக்கான இரண்டாவது மருத்துவமனை மற்றும் ஒரு புதிய புற்றுநோய் பராமரிப்பு மையத்தை நிர்மாணிப்பதில் ஆதரவளிப்பதற்காக 1% மருத்துவமனை தீர்வையை மேலும் தொடர்தல்
- புதிய மருத்துவப் பள்ளி அமைக்க ஆதரவு

*பேருந்துப் போக்குவரத்து*

- புதிய பேருந்துகளை வாங்குதல் மற்றும் பழையவற்றைப் புதுப்பித்தலுக்கு: $78.4 மில்லியன்

- பிரமீலி சாலை வழித்தடத்தில் பிராம்ப்டன் பேருந்து போக்குவரத்தின் ஜூம் பேருந்து சேவை விரிவாக்கத்திற்கு: $3.8 மில்லியன்
- புதிய போக்குவரத்து சேவைக்காக 108,500 மணி நேரம்
- 136 புதிய பேருந்து ஓட்டுனர்கள்

*பொழுதுபோக்கு*

- எம்பிள்டன் (Embleton) சமுதாயக்கூடம் கட்டுமானம்: $79.8M
- ஹௌடென் (Howden) பொழுதுபோக்கு மையக் கட்டுமானம்: $24.2M
- கிரிக்கெட் உள்கட்டமைப்பு மற்றும் திட்ட நிகழ்ச்சி வரைவு: $6M
- செஞ்சுரி கார்டன்ஸ் யூத் ஹப் கட்டுமானம்: $5.5M
- டென்னிஸ், கபடி, பிக்கிள்பால், கூடைப்பந்து, நாய்களுக்கான பூங்கா மற்றும் விளையாட்டு மைதான மேம்பாடுகள்: $6.1M
- நினைவரங்க விரிவாக்கம் (கட்டுமானம்): $2.5M
- FCCC இல் புல்வெளி பந்துவீச்சு: $900,000
- கூடைப்பந்து மைதானம் மற்றும் CAA மையத்தில் மேம்பாடுகள்: $375,000
- சென்ட்ரல் பீலில் செயற்கை புல்வெளி: $200,000
- நினைவு அரங்க விரிவாக்கத்திற்கு (கட்டுமானம்): $2.5M
- FCCC இல் புல்வெளி பந்துவீச்சுக்கு: $900,000
- கூடைப்பந்து மைதானம் மற்றும் CAA மையத்தில் மேம்பாடுகளுக்கு: $375,000
- சென்ட்ரல் பீலில் செயற்கை புல்வெளி அமைக்க: $200,000
- லோஃபர்ஸ் லேக் (Loafer’s Lake) பொழுதுபோக்கு மையத்தில் புதிய, உள்ளடக்கிய பல்லுணர்வறியும் அறை: $100,000

*சுற்றுச்சூழல்*

- ரிவர்வாக் (Riverwalk )முதல் கட்டம் (வெள்ள பாதுகாப்பு): $87.3M
- வடிகால் கால்வாய் ஆய்வு மற்றும் பராமரிப்பு திட்டம்: $1M
- அரிமானக் கட்டுப்பாடு மற்றும் ஓடைக்கரையை (ஸ்ட்ரீம்பேங்க்) உறுதிப்படுத்தல்: $1M
- ஆற்றல் திறன்கூட்டும் திட்டங்கள் மூலம் சக்தி மற்றும் உமிழ்வைக் குறைக்க: $215,000
- சமுதாயத் தோட்டங்களை மேம்படுத்துதல்: $100,000

- சிங்க்வாகவ்ஸி (Chinguacousy) பூங்கா மேம்படுத்தல்கள்: $25,000
- காட்டுவெள்ள நீர்க் கட்டுப்பாட்டுக்கான மூலதன மேம்பாடுகள்: $7.9M

**பிராம்ப்டன் பட்ஜெட் உருவாக்கச் செயல்முறை பற்றி**

முன்மொழியப்பட்ட பட்ஜெட் ஆனது, தற்போது நகரின் [இணைய தளத்தில்](#) வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆவணங்கள் உங்களுக்கு மாற்று வடிவத்தில் தேவைப்பட்டால், தயவுசெய்து உங்கள் கோரிக்கையை accessibility@brampton.ca க்கு மின்னஞ்சல் மூலமாக சமர்ப்பிக்கவும்.

பொதுப் பிரதிநிதித்துவம் மற்றும் நகரசபை விவாதங்கள் டிசம்பர் 5, செவ்வாய் அன்று தொடங்கும், இறுதி பட்ஜெட் ஒப்புதல் டிசம்பர் 13, 2023 க்கு திட்டமிடப்பட்டுள்ளது.

*முனிசிபல் சட்டம், 2001* என்பது, நகரத்தின் வரவு செலவுத் திட்டம் தொடர்பாக, இப்போது மேயருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகளை கோடிட்டுக் காட்டுகிறது. "நகரசபையின் தலைவர் என்பவர், விதிமுறைகளின்படி, நகரத்திற்கான முன்மொழியப்பட்ட பட்ஜெட்டை தயார் செய்து, நகர சபையின் பரிசீலனைக்காக நகர சபைக்கு முன்மொழியப்பட்ட பட்ஜெட்டாக வழங்க வேண்டும்" என்று இந்தச் சட்டவடிவு கூறுகிறது.

வரவு செலவுத் திட்டத்தை, கவுன்சில் பரிசீலனை செய்ய 30 நாள் கால அவகாசம் தொடங்கியுள்ளது; இச்சமயத்தில், மேயரின் வரவு செலவுத் திட்டத்தைத் திருத்துவதற்கான தீர்மானங்களை நகரசபை ஏற்றுக்கொள்ளலாம். ஒரு தீர்மானத்தின் மூலம் 30 நாள் கால அவகாசத்தை கவுன்சில் குறைக்கலாம். 30-நாள் (அல்லது குறைக்கப்பட்ட) காலம் முடிவடைந்த பிறகு, (பட்ஜெட்டைத் திருத்துவதற்கு நகரசபை தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை என்றால்) பட்ஜெட் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது. பட்ஜெட்டில் திருத்தம் செய்ய நகரசபை தீர்மானித்தால், ஒரு வீட்டோ அதிகாரத்தைப் பிரயோகிக்க மேயருக்கு 10 நாட்கள் அவகாசம் உள்ளது.  கவுன்சில் தீர்மானத்தின் மீது வீட்டோ அதிகாரத்தைப் பிரயோகிக்க மேயர் எடுக்கும் எந்த முடிவும், நகரசபையின் அனைத்து உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளால் மேயரின் வீட்டோ அதிகாரத்தை புறம் தள்ளுவதற்காக, நகரசபைக்கு மேலும் 15 நாள் கால அவகாசம் தேவைப்படும்.

நகரத்தின் வருடாந்திர பட்ஜெட் செயல்முறையானது, தொலைபேசி டவுன் ஹால்கள், காபி குடித்தபடியானஅரட்டைகள், விளம்பரங்கள், செய்தி வெளியீடுகள், சமூக ஊடகங்கள் மற்றும்

நகரத்தின் பட்ஜெட் இணையதளம் உள்ளிட்ட, தகவல் தொடர்பு மற்றும் ஈடுபாடு கொள்ள வைக்கும் முயற்சிகள் மூலம் பிராம்ப்டன் குடிமக்களை சென்றடைகிறது மற்றும் கல்வி கற்பிக்கிறது மற்றும் தெரியப்படுத்துகிறது.

இந்த ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டமானது, பிராம்ப்டன் நகரத்தின் பெருநிறுவன யுக்தித் திட்டம் 2022-2026 ஐ ஆதரிக்கிறது. இந்த முக்கியமான ஆவணம், சமூகத்திற்கு மிக முக்கியமானவை எவை என்பதை முதன்மைப்படுத்தி, அவற்றை வழங்குவதற்கான கட்டமைப்பை வழங்கும். இது, நகரத்தின் பட்ஜெட் மாஸ்டர் பிளான்கள், திட்டங்கள், சேவைகள் மற்றும் வளங்களுக்கான சூழலை அமைக்கும் வாழ்க்கைத் திட்டமாக இருக்கும்.

**கூடுதல் ஆதாரவளங்கள்**

முன்மொழியப்பட்ட பட்ஜெட்டை மீள்பார்வையிட செய்ய அல்லது சுருக்கப்பட்ட சிறப்பம்சங்கள் கொண்ட பதிப்பைப் படிக்க, வருகை தரவும் www.Brampton.ca/budget.

நகரசபைக் கூட்டத்தில் சமர்ப்பிப்பது பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகைதரவும் பிராம்ப்டன் நகரம் | நகரசபை மற்றும் கூட்டங்கள் | பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளுதல், பங்கேற்றல் அல்லது ஒரு குழுவில் சேருதல்.

**அறிஞர் கூற்று**

“2024 பட்ஜெட்டை வெளியிடுவதில் நான் பரவசமடைகிறேன், இது பிராம்ப்டனுக்கான அனுகூலங்களை உருவாக்க அர்ப்பணிக்கப்பட்ட ஒரு மூலோபாய வரைபடமாகும். பேருந்து போக்குவரத்து, உடல் ஆரோக்கியப் பராமரிப்பு, பொழுதுபோக்கு, சமூகப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் சாலைகள் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றில் முக்கியமான முதலீடுகளுக்கு இந்த பட்ஜெட் முன்னுரிமை அளிக்கிறது, இது ஒவ்வொரு பிராம்ப்டன் குடியிருப்பாளருக்கும் வளமான மற்றும் துடிப்பான எதிர்காலத்தை உறுதி செய்கிறது. இந்த வரவுசெலவுத் திட்டமானது, கையிருப்பு நிதிக்கு சாதனை பங்களிப்பை வழங்குகிறது மற்றும் GTA இல் மிகக் குறைந்த வரி அதிகரிப்பு மட்டுமே செய்கிறது என்பதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன். அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நெகிழ்ச்சியான சமூகத்திற்கான எங்கள் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில், இந்த பட்ஜெட்டுக்கு நாங்கள் இறுதிவடிவம் கொடுக்கும்போது உங்கள் கருத்து மிகவும் முக்கியமானதாகும்."

- *பேட்ரிக் பிரவுன், மேயர், பிராம்ப்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 90,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். X (முன்னாட்களில் Twitter), Facebook, LinkedIn மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca